கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 58 இதழ் : 05 ஆகஸ்ட் 2023 விலை ரூ.25/-



## யார் மண்? யார் மக்கள்? — ம.ரா.

## கணையாழி மின்னிதழ் சந்தா விவரம்

தனி இதழ்  ரூ 25

ஓராண்டு சந்தா  ரூ 275

சந்தா செலுத்துபவர்களுக்கு மின்னிதழ் அனுப்பப்படும்.

இணையத்தில் வாசிக்க அன்புகூர்ந்து
**www.kanaiyazhi.com** அல்லது
**magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிதழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி பெறலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.

## மின்னிதழ் சந்தா செலுத்த வங்கி விவரம்

Account Name - KANAIYAZHI,
Account No. -147202000000792
Bank - INDIAN OVERSEAS BANK,
VALMIKI NAGAR BRANCH,
CHENNAI-600 041.
IFSC CODE- IOBA0001472

Kanaiyazhi Tamil Magazine

G Pay

# உள்ளடக்கம்


**கடிதம்**

கலைஞர் மு.கருணாநிதி 06

**கட்டுரை**

கவிஜி 15

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ்.ரமேஷ் 25

மு.இராமசாமி 39

உடுமலை கி.ராம்கணேஷ் 62

**சிறுகதை**

அகராதி 10

வாசுதேவன் அருணாசலம் 20

சந்திரகிருஷ்ணன் 35

பா.ஆசைத்தம்பி 56

**கவிதை**

மௌலானா ஜலாலுதீன் ரூமி

தமிழில்: வ.ஜெயதேவன் 09

ஆர்.வத்ஸலா 19

இரா.மதிபாலா 19

செ.புனிதஜோதி 24

க.மோகன் 67

**கடைசிப் பக்கம்**

இந்திரா பார்த்தசாரதி 68



சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்

# “கிறுக்கி மாதிரி என்னத்தையாவது பேசாத!”

“இன்னுமொரு இருபது நிமிசத்துக்கு முன்னாடி கொண்டுவந்திருந்தீங்கன்னா, காப்பாத்தியிருக்கலாம். ட்ரிப்ஸ் போடுறப்ப பிளட்ட ட்ரா பண்ணும்போது பாத்திங்கல்ல... பிளட்டோட கலரே மாறிப்போச்சு. பாய்ஸன் க்விக்கா ஹார்ட்டுக்குப் போயிடுச்சு!” என்று அந்த இளம் கால்நடை பெண் மருத்துவர் கூறிய வார்த்தைகள் கருணாகரனுக்குக் காதில் தொடர்ந்து ஒலித்துக்கொண்டேயிருந்தன. காரை எடுத்தவுடன் முன் கதவு திறந்தும் திறக்காமலும், முன் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டுவரும் பென்னி இன்று பின்னிருக்கையில். இழப்புகள் தரும் அழுத்தத்தை ஏற்றுப்பழகியிருந்தாலும், பென்னியின் இழப்புத் தாளமுடியாத் துயரமாகவே கருணாகரனுக்கு இருந்தது. பன்னிரெண்டு வருடங்கள். “பென்னி இறந்துவிட்டாள் என்பதை எப்படி வாசுகிக்குத் தெரிவிப்பது? மறைக்க முடியாது. சொல்லித்தான் ஆகவேண்டும்.” தன்னுடைய கைபேசியிலிருந்து வாசுகியை அழைத்தார்.பென்னி இறந்துவிட்ட செய்தியை மெல்லக் குரல் நடுங்கக் கூறினார். வாசுகியின் அதிர்ச்சியை அவரால் உணரமுடிந்தது. கடந்த சில மாதங்களாக, வாசுகி எங்கு சென்றாலும் உடன் செல்லும் பழக்கம் பென்னிக்கு ஏன் திடீரென்று வந்தது என்று ஆராய்ந்து பதில் கண்டறியமுடியாமல் தோற்றுப்போனதுதான் மிச்சம். “அந்த நல்ல பாம்பு எழவு ஏன் அங்க வரணும்? எத்தனையோ பெரிய பெரிய பாம்புகளையெல்லாம் பிடிச்சு கொன்னு கொதறி எறிஞ்சிடும் பென்னி இந்தச் சின்ன பாம்புகிட்ட ஏமாந்திருச்சே!” என்று ஆதங்கப்பட்டுக்கொண்டே காரைக் கருணாகரன் ஓட்டிக் கொண்டிருந்தார். துணியில் சுற்றி காரின் பின் இருக்கையிலிருந்த பென்னியின் உடலை காரின் இடது முன்இருக்கையில் அமர்ந்திருந்த கருணாகரனின் பக்கத்துவீட்டுக்காரர், சுகிசிவம், திரும்பிப் பார்த்துக்கொண்டே “பாவம் சார்! பென்னி! உங்க எல்லாரையும் காப்பாத்திட்டு அது செத்துப்போச்சு! மனுசங்ககூட இப்படி இருக்கமாட்டாங்க, சார்” என்றார். பதில் பேசாமல், தலையை மட்டும் சரி என்பதுபோல ஆட்டினார் கருணாகரன். “சாரி, சார். மேடம்தான் ரொம்ப அப்ஸட்டாயிருவாங்க! “பிள்ள மாதிரி பாத்துக்கிட்டாங்க. கூடயேல சுத்துக்கிட்டு இருந்துச்சு! இப்படி திடீர்னு போயிடும்னு யாரும் எதிர் பாக்கலீங்க! எல்லாம்

விதிதான் சார்'' என்ற வார்த்தைகள் கருணாகரனுக்கு ஆறதலாக இருக்க முடியாது. பன்னிரெண்டு வருடத்திற்குமுன் அனாதையாகச் சாலையில் அடிபட்டுக்கிடந்த பென்னியைக் கால்நடை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று காப்பாற்றி அதை வீட்டிற்குத் தூக்கிவந்து வளர்த்து வந்ததுமட்டுமல்லாமல், வால்பாறைக்குப் பணியிட மாறுதல் பெற்று அங்கு சென்றபோது, ''பல விஷ ஐந்துகளிடமிருந்து தன்னுடைய குடும்பத்தையே காப்பாற்றிய பென்னியைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே!'' என்று கருணாகரனின் மனம் ஆற்றுப்படமுடியாமல் துடித்துக் கொண்டிருந்தது. ''ஆஃபிஸில் பாழாப்போன அந்த மெயிலுக்குப் பதில் அனுப்பாம வீட்டுக்கு வந்திருந்தா, பென்னிய காப்பாத்தியிருக்கலாமே!'' என்று தன்னையே நொந்துகொண்டிருந்தார் கருணாகரன்.

கார் வீடுவந்து சேர்ந்தது. வீட்டிற்குமுன் சிறிய கூட்டம் கூடியிருந்தது. பென்னி இறந்தசெய்தி கருணாகரன் வசித்துவந்த தெருவிலிருந்த பல வீடுகளுக்குப் பரவியிருந்தது. பென்னியைப் பற்றித் தெரியாதவர்கள் அங்கு இருக்க முடியாது. அந்த அளவிற்குப் பிரபலமானவள் பென்னி. பள்ளி ஆசிரியை, பிரபா, தன்னுடைய மகனை அனுப்பி நான்கு பெரிய கல் உப்புப் பொட்டலங்களை வாங்கி வைத்திருந்தார். பின்வீட்டு நீலகண்டன் கையில் கடப்பாறைக்கம்பியுடனும், சிறிய மண்வெட்டியுடனும் அங்கே காத்திருந்தான். கருணாகரன் தன்னுடைய வீட்டின் முன்புறமிருந்த நான்கு சென்ட் இடத்தில் தோட்டம் ஒன்றை அமைத்திருந்தார். அந்தக் காலனியில் வசிப்பவர்களின் வீடுகளிலிலேயே அதிக மரங்கள் இருக்கும் ஒரே வீடு கருணாகரனுடையது. தன்னுடைய தோட்டத்திலேயே பென்னியைப் புதைக்கப்போவதாகத் தெரிவித்தபோது, மின்சாரத்துறையிலிருந்து பணிஓய்வு பெற்ற தனஞ்சயன், ''சார், உங்க வீட்டுக்குள்ளேயே புதைக்காதீங்க... பென்னி எல்லாருக்கும் சொந்தமானவள். அவள ஒரு பொதுவான இடத்தில புதைச்சா எல்லாருக்குமே ஒரு ஆறுதலாயிருக்கும்'' என்றார். 'பென்னி எத்தனைபேருடைய இதயங்களை வென்றிருக்கிறாள்' என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டே ''சரி'' என்றார் கருணாகரன். ''நீலகண்டா! அந்த கார்னர்ல தோண்டு. சரியாயிருக்கும்!'' என்றார் தனஞ்சயன். நீலகண்டன் தன்னுடைய லுங்கியை மடித்துக் கட்டிக்கொண்டு தனஞ்சயன் குறிப்பிட்ட இடத்தை நோக்கி நகர்ந்தான். ''நானும் வர்றேன்'' என்று நீலகண்டனுடன் சென்றான் குமுதன். தெருவின் வளைவில் இருந்த பொதுவான காலியிடத்தின் மேல் பகுதியை மண்வெட்டியை வைத்து, சுத்தம்செய்தான் நீலகண்டன். கடப்பாறைக்கம்பியை நன்றாகத் துாக்கித் அதனுடைய கூர்மையான பகுதியைத் தரையில் பாய்ச்ச முயற்சித்தான் குமுதன். கம்பி தரையில் இறங்க மறுப்பது போல் துள்ளி மேலேயெழுந்தது. ''கொஞ்சம் பக்கெட்டுல தண்ணி கொண்டுவாங்க! ஊறவச்சுத்தான் தோண்டணும்'' என்றான் குமுதன். வாசுகியின் கையைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த இலஞ்சி ''இந்தா கொண்டுவர்றேன்'' என்று விரைந்தாள். அதுவரை குமுதன் தோண்டும் முயற்சியை நிறுத்தவில்லை. சிறிதுநேரத்தில் இலஞ்சி ஒரு வாளியில் தண்ணீரோடு வந்தாள். அங்கு கிடந்த மண்ணை அணைத்து, தோண்டவேண்டிய இடத்தைச் சுற்றிப் பாத்திகட்டினான் நீலகண்டன். பாத்திக்குள் தண்ணீர் ஊற்றப்பட்டது. ''இன்னொரு பக்கெட்டு வேணும். இது பத்தாது!'' என்றான் குமுதன். இலஞ்சி மேலும் ஒரு வாளித் தண்ணீர் கொண்டுவர அங்கிருந்து

கிளம்பினாள். கடப்பாறையைத் தூக்கிப் பாத்திக்குள் தேங்கிய தண்ணீரில் போடப்போன குமுதனை "பொறு! தண்ணி எறங்கட்டும்!" என்று தடுத்தான் நீலகண்டன். "கொஞ்சம் குத்திவிட்டா, தண்ணீ நல்லா எறங்கும். தோண்ட கொஞ்சம் ஈஸியாயிருக்கும்! என்றான் குமுதன். "தண்ணித் தெறிக்காம, மெதுவாப் போடு" என்று கூறி, சற்றுத் தள்ளி நின்றுகொண்டான் நீலகண்டன். நான்கு ஐந்து இடங்களில் கடப்பாறையால் மெல்லக் குத்தி அசைத்து தண்ணீர் இறங்க வழிசெய்துகொண்டிருந்தான். இலஞ்சி இரண்டாவதாக வாளியில் கொண்டுவந்த தண்ணீரும் பாத்திக்குள் ஊற்றப்பட்டது. "கொஞ்ச நேரம் ஆகட்டும், குமுதன்.. தண்ணி நல்லா எறங்குச்சுன்னா தோண்ட ஈஸியாயிருக்கும். கொஞ்சம் வெயிட் பண்ணு" என்றார் தனஞ்சயன். "சரிங்க, சார்" என்று பதில் சொல்லிக்கொண்டே அங்கிருந்த கருணாகரனிடம், "சார், பாம்ப என்ன செஞ்சிங்க? எரிச்சிட்டிங்களா?" என்றான். "அங்கதான் கிடக்கு" என்று தன் வீட்டின் தோட்டத்தை நோக்கிக் கையைக் காட்டினார். "இந்தா வந்திடுறேன்" என்று அங்கிருந்து கிளம்பினான் குமுதன். "நானும் வர்றேன்ப்பா" என்று குமுதனின் பதிமூன்று வயது மகள், சினேகா, அவனுடன் சென்றாள். சற்று நேரத்தில் குமுதன் ஒரு நீண்ட குச்சியில் இரண்டாக வளைந்து தொங்கியபடி இறந்துபோன பாம்பைத் தூக்கிக்கொண்டு வந்தான். குமுதனின் நடை அசைவில் குச்சியின் ஒரு புறமாக பாம்பு நழுவி கீழே விழுந்தது. குச்சியில் மீண்டும் லாவகமாகத் தூக்கிக்கொண்டு, கையில் மிகுந்த அசைவின்றி, கயிற்றில் அந்தரத்தில் நடப்பதுபோன்ற பாவனையுடன் அங்கு வந்தான். "அந்த எழவ தீய வைச்சு கொளுத்து" என்றாள் இலஞ்சி. "நீ கொஞ்சம் சும்மா இருக்கா! விரியன்சாமி வாத்தியாருதான் சரியாச் சொல்லுவாரு! அவரக் கேட்டுக்குவோம்" என்றான் குமுதன். "கண்ட பாம்புன்னா என்ன வேணும்னாலும் செய்யலாம். இது நல்லது. சரியா எதையும் செய்யணும். ஒரு மஞ்ச துணியில ஒர்ரூபா காச முடிஞ்சு, முட்டையும் பாலும் ஊத்தித்தான் புதைக்கணும். கொஞ்சம் அவசரப்படாதக்கா!" என்று சொல்லிக்கொண்டே அங்கு நின்றிருந்த விரியன்சாமி வாத்தியாரைப் பார்த்தான். "அதெல்லாம ஒண்ணும் வேணாம். தூக்கிப்போட்டுத் தீய்ய வைய்யி!" என்ற வெறுப்பு நிறைந்த பதிலை விரியன்சாமி வாத்தியாரிடமிருந்து குமுதன் எதிர்பார்க்கவில்லை. இலஞ்சியின் கொல்லென்ற சிரிப்பு மட்டும் குமுதனுக்கு மிகத் தெளிவாகவே கேட்டது. சிரிப்பு வந்த திசைநோக்கி ஒரு கனல் பார்வையை மட்டும் விட்டெறிந்துவிட்டு அங்கிருந்து பத்தடி தூரம் கடந்து சென்றான் குமுதன். உடன் சினேகாவும் சென்றாள். "அப்பா, அதத் தொட்டுப்பாக்கட்டுமா?" என்றாள். "ம் ... வா, வந்து பாரு!" என்றபடி அங்கே தரையில் பாம்பைப் போட்டான் குமுதன். சினேகா குத்துக்காலிட்டுத் தரையில் உட்கார்ந்தாள். மிகவும் தயக்கத்துடன் பாம்பின் உடலில் அடிபடாத இடத்தைத் தன்னுடைய ஆட்காட்டி விரலால் இரண்டு மூன்று முறை தொட்டு அழுத்திப்பார்த்தாள். "அப்பா அழி ரப்பர் மாதிரி மெதுக்கு மெதுக்குன்னு இருக்குப்பா?" என்றாள் ஒரு சிறிய புன்முறுவலுடன். "எந்திரி! கொஞ்சம் தள்ளிவா" என்றுபடி அங்கிருந்த செத்தைகளையும் சிறுசிறு குச்சிகளையும் இழுத்து பாம்பின் உடல்மீது போட்டான். மடித்துக் கட்டியிருந்த தன்னுடைய வேஷ்டியின் வலது ஓரத்தை அளவாகத் தூக்கி அணிந்திருந்த நீண்ட உள்ளாடையின் ஓரப்பையிலிருந்து ஒரு தீப்பெட்டியை எடுத்துச் செத்தைகளைச் சற்று விலக்கித் தீ மூட்டினான். மெலிந்த தீ பற்றிப் பரவி அனைத்துச்

செத்தைகளையும் தொற்றி மேலெழுந்து எரிந்தது. செத்தைக்குள் கிடந்த பாம்பின் உடல் சற்றே நெளிந்தது. "அப்பா! பாம்பு போகுது!" என்று சினேகா அலறினாள். "கூறுகெட்டவளே! செத்த பாம்பு எங்கடி போகும்.தீ பட்டதும் உடம்பு நெளியும். அவ்வளவுதான்" என்றபடி மேலும் சில குச்சிகளை இழுத்து எரியும் தீயில் தள்ளிவிட்டான். "ஏய்! குமுதா...வாப்பா... இங்க... சீக்கிரம் தோண்டு. நேரமாச்சுனா, வெறச்சிடும். அப்புறம் குழி பெரிசாத் தோண்டணும்" என்று உரக்கக் கூறி அழைத்தாள் இலஞ்சி. "இந்தா வந்துட்டேன்" என்று சினேகா பின் தொடர, பாத்திகட்டி தண்ணீர் நிரப்பப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றான் குமுதன். கீழே கிடந்த கடப்பாறைக் கம்பியைத் தூக்கி ஆழமாக இறக்கித் தோண்ட ஆரம்பித்தான். நீலகண்டன் மண்ணைக் குழியிலிருந்து மண்வெட்டியால் வாரி வெளியில் எறிந்தான். மூன்றடி ஆழத்திற்குக் குழி தோண்டப்பட்டது. "கல் உப்பு கொண்டாங்க" என்றான் குமுதன். இலஞ்சி ஒரு பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தாள். கை நகத்தாலேயே பொட்டலத்தைக் கிழித்துப் பிரித்து, உப்பை வெறும் குழியில் அனைத்துப் பகுதியிலும் விழும்படிக் கொட்டினான். பென்னியின் உடலைச் சுற்றியிருந்த துணியை எடுத்துவிட்டு, நீலகண்டன் தாங்கிப்பிடிக்க, மெதுவாக பென்னியின் உடலை குமுதன் குழிக்குள்ளே இறக்கினான். பின்னர், மீதமிருந்த மூன்று உப்புப்பொட்டலங்களைப் பிரித்து கொஞ்சம் கொஞ்சமாக பென்னியின் உடலைச் சுற்றித் தண்ணீரைத் தெளிப்பதுபோல் உப்பைப் போட்டான் கடைசிப்பொட்டலத்தின் உப்பை அங்கிருந்தவர்கள் எடுத்துக்கொள்ள அழைத்தான். ஒவ்வொருவராக வந்து சிறிதளவு உப்பைக் குமுதனிடமிருந்து பெற்று, குழிக்குள் போட்டுச் சென்றனர். "எல்லாரும் உப்பு போட்டுட்டீங்களா!" என்று உரக்கக் கேட்டுக்கொண்டு நீலகண்டனிடமிருந்த மண்வெட்டியைப் பெற்று, குழியின் விளிம்புகளில் குவிக்கப்பட்டிருந்த மண்ணை மெல்லத் தள்ளிக் குழியை குமுதன் நிரவினான். மீதமிருந்த மண்ணை ஒரு குவியலாகக் குவித்து அங்கிருந்து நகர்ந்தான். சில வினாடிகளில் ஒரு தட்டையான பெரிய கல்லைத் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு வந்து அந்தக் குவியல்மீது இறக்கிவைத்தான். "வேற நாய்க எதுவும் தோண்டிடக்கூடாது. அதுக்குத்தான்" என்றான் குமுதன். அனைவரும் கொஞ்சம் கொஞ்சமாக அங்கிருந்து கிளம்பினர். குமுதன் சினேகாவை அழைத்துக்கொண்டு தெருவின் முனையிலுள்ள தன் வீட்டிற்குக் கிளம்பினான்.

"என்னத்த யோசிச்சிக்கிட்டு வர்ற!" என்று வழக்கத்திற்கு மாறாகக் கேள்விகள் எதுவுமின்றி அமைதியாகத் தன்னுடன் நடந்து வந்துகொண்டிருந்த சினேகாவிடம் கேட்டான் குமுதன். "இல்லப்பா! அந்த பாம்புதான்! கருணாகரன் மாமா அதைஅடிச்சுக் கொல்லும்போது அதுக்கும் வலிச்சிருக்குமில்ல... அதுவும் அழுதிருக்குமில்ல... கருணாகரன் மாமா பெரிய நீளமான கட்டைய வச்சு அது முதுகுல குத்துனப்ப அந்தப் பாம்பு அந்தக் கட்டைய கடிச்சத நான் பாத்தேன். அது வலியில துடிச்சதனாலதான் அப்படி கடிச்சிச்சுன்னு நினைக்கிறேன். பாம்பு அதுபாட்டுக்குத்தான் முதல்ல போயிகிட்டு இருந்துச்சு. மாமாதான் பென்னியக்கூப்பிட்டு பாம்பைப் பிடின்னு 'ச்சூக்' காட்டுனாரு!. அதுக்கப்புறந்தான் பென்னி அதப் பிடிக்க ஓடிச்சு. பென்னி பாம்போட முதுகக் கடிச்சிடுச்சு. பாம்பு சட்டுன்னு திரும்பி பென்னியோட நாக்கில கொத்திடுச்சுப்பா. மாமா பேசாம இருந்திருந்தா, பென்னியும் செத்திருக்காது. அந்தப் பாம்பும் செத்திருக்காது.... ஏம்பா!... பென்னி செத்திடுச்சுன்னு

எல்லாரும் வருத்தப்பட்டோம். ஆனா... பாம்பு செத்திடுச்சேன்னு... ஏம்பா, யாரும் வருத்தப்படல?" என்றாள் சினேகா. "கிறுக்கிமாதிரி என்னத்தையாவது பேசாத!... பேசாமா வா" என்று வெடுக்கென்று கூறி வேகமாக வீட்டைநோக்கி நடத்தான் குமுதன்.

vasuaruntamil@gmail.com ■